சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.45/2023</u>

20.04.2026

பி.வா.சா.1 திருமதி.மதுரபாஷினி, க/பெ. காளிமுத்து

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியிடம் நான் பெற்ற கடனை வட்டியுடன் திரும்ப செலுத்த கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அப்படிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார், ஆனால் நான் பணம் எதுவும் வாங்கவில்லை. நான் வாதியிடம் 16.02.2020 ல் பெற்ற கடனை திரும்ப செலுத்தவேண்டும் என வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டு பதில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிரதிவாதி தரதப்பில் தாக்கல் செய்துள்ள வக்காலத்து, எதிர்வழக்குரை ஆகியவற்றில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல என்பதை நிரூபிக்க கையெழுத்து நிபுணருக்கு அனுப்புவத்றகாக மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில்உள்ள கையெழுத்து என்னுடையது என்பதால்தான் நான் மனு தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி திருவாரூரில் மளிகை கடை வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் அவரை பார்த்ததில்லை. வாதியிடம் அவர் நடத்தும் மளிகை கடையில் பொருட்கள் வாங்கியதன் அடிப்படையில் பழக்கமானார் என்றாலும் அதனால் தான் ரூ.2,00,000/- கடனாக வாங்கினேன் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் எனது கணவர் கையொப்பம் போல் போட்டுள்ளார்கள் ஆனால் என் கணவர் தமிழில்தான் கையொப்பம் போடுவார். எதிர்வழக்குரையில் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து எனது கணவரின் கையெழுத்தை போல போடப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என் கணவர் கையெழுத்து இல்லை என்பதை பற்றி தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதற்காக நான் நடவடிக்கை

தனியாக எடுத்துள்ளேனா என்றால் தனியாக எடுக்கவில்லை, இந்த வழக்கிலேயே சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியானது என்பதற்காக நான் காவல்துறையில் இதுநாள் வரை நடவடிக்கை ஏதாவது எடுத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. வாதியிடம் பெற்ற கடனை ஏமாற்றுவதற்காக கடனுறுதிசீட்டில் உள்ள கையயழுத்து என்னுடையது இல்லை என்றும் சாட்சி கையெழுத்து என் கணவருடையது இல்லை என்றும் பொய்கட்சியாடுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு உடல்நிலை சரியில்லை என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு உடல்நிலை சரியில்லை என வழக்கிற்காக பொய்கட்சியாடுகிறேன் என்றால் சரியல்ல. தாவாபடி வாதிக்கு பணத்தை திரும்ப செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.